OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 97
MADRAS.

ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - ௧௦.] துர்முகி௵ ஐப்பசி௴. [எண் - ௧௦.

வேதாகமப்பிரகரணம்.

காயத்திரீ என்னும் மந்திரபுஷ்ப ஸாரம்.

(௧௨௬-ம் பக்கத்தொடர்.)

యోఽపాం పుష్పం వేద । పుష్పవాన్ ప్రజావాన్ పశుమాన్ భవతి । చంద్రమా వా అపాం పుష్పం । పుష్పవాన్ ప్రజావాన్ పశుమాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి ॥

எந்த புருஷன் ஜலத்தை ஸ்தானமாக அறிந்துகொண்டிருக்கிறானோ, அவன் புஷ்பம் அல்லது ஓஷதிகளை யுடையவனாயும், சந்தானங்களான பிரஜைகளையுடையவனாயும், பசுக்களையுடையவனாயும் இருக்கிறான். பகவான் ஜலத்திற்கு ஸ்தானமாக இருக்கிறான். எந்த புருஷன் இவ்வண்ணம் அறிந்து கொள்ளுகிறானோ, அவன் ஓஷதிகளையுடையவனாயும், சந்தானமுடையவனாயும், பசுக்களையுடையவனாயும் ஆகிறான். எந்த புருஷன் ஜலத்திற்கு ஸ்தானத்தை தெரிந்து கொள்ளுகிறானோ அவன் மோக்ஷ ஸ்தானத்தை யடைந்தவனாகிறான்.

అగ్నిర్వా అపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యోఽగ్నేరాయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వా అగ్నేరాయతనం । ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద ఆయతనవాన్ భవతి ॥

அக்கினி ஜலத்திற்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிறான், எவன் அக்கினியினுடைய ஸ்தானத்தை அறிந்துகொள்ளுகிறானோ அவன் அந்த ஸ்தானத்தை யடைகிறான். ஜலம் அக்கினிக்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிறான். எவன் இப்படி ஜல ஸ்தானத்தை தெரிந்துகொள்ளுகிறானோ அவன் அந்தஸ்தானத்தை யடைகிறான்.

వాయుర్వా అపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యో వాయోరాయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వై వాయోరాయతనం । ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి ।

வாயுவானது ஜலத்திற்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிறான், எவன் வாயுவினுடைய ஸ்தானத்தை யறிகிறானோ அவனந்த ஸ்தானத்தை யடைகிறான். ஜலமானது வாயுவுக்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிறான். இந்தப்பிரகாரம் எவன் ஜலத்தினுடைய ஸ்தானத்தை யறிகிறானோ அவனந்தஸ்தானத்தை யடைகிறான்.

అసౌ వై తపన్నపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యోఽముష్య తపత ఆయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వా అముష్య తపత ఆయతనం । ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి ॥

தபனனாகிய சூரியன் ஜலத்திற்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிறான். எவன் தபனனாகிய சூரியனுடைய ஸ்தானத்தை யறிகிறானோ அவனந்த ஸ்தானத்தை யடைகிறான். ஜலமானது சூரியனுக்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிறான். இந்தப்பிரகாரம் எவன் ஜலஸ்தானத்தையறிகிறானோ அவனந்த ஸ்தானத்தை யடைகிறான்.

చంద్రమావా అపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యశ్చంద్రమస ఆయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వై చంద్రమస ఆయతనం ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి ॥

சந்திரன்ஜலத்திற்கு ஸ்தானம்—அந்தஸ்தானத்தை யடைகிருன். எவன் சந்திரனுடைய ஸ்தானத்தை யறிகிருனே அவனந்த ஸ்தானத்தை யடைகிருன். ஜலமானது சந்திரனுக்கு ஸ்தானம்— அந்த ஸ்தானததை யடைகிருன் இப்படி எவன் ஜலஸ்தானத்தை யறிகிருனே அவனந்தஸ்தானத்தை யடைகிருன்.

నక్షత్రాణివా అపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యో నక్షత్రాణామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వై నక్షత్రాణామాయతనం । ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి ॥

நக்ஷத்திரங்கள் ஜலத்திற்கு ஸ்தானம்—அந்தஸ்தானத்தையடைகிருன். எவன் நக்ஷத்திரங்களுடைய ஸ்தானத்தை யறிகிருனே அவன் அந்த ஸ்தானத்தை யடைகிருன். ஜலமானது நக்ஷத்திரங்களுக்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிருன். இப்படி எவன் ஜலஸ்தானத்தையறிகிருனே அவனந்தஸ்தானத்தை யடைகிருன்.

పర్జన్యోవా అపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యః పర్జన్యస్యాయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వై పర్జన్యస్యాయతనం । ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద । యోఽపామాయతనం వేద । ఆయతనవాన్ భవతి ॥

மேகம் ஜலத்திற்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிருன். எவன் மேகஸ்தானத்தை யறிகிருனே அவனந்தஸ்தானத்தையடைகிருன். ஜலமானது மேகத்திற்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிருன். எவன் இப்படி ஜலஸ்தானத்தை யறிகிருனே அவனந்த ஸ்தானத்தை யடைகிருன்.

సంవత్సరోవా అపామాయతనం । ఆయతనవాన్ భవతి । యస్సంవత్సరస్యాయతనం వేద । ఆయతనవాన్ భవతి । ఆపో వై సంవత్సరస్యాయతనం । ఆయతనవాన్ భవతి । య ఏవం వేద ॥

வருஷமானது ஜலத்திற்கு ஸ்தானம்—அந்த ஸ்தானத்தை யடைகிருன். வருஷத்தினுடைய ஸ்தானத்தையறிகிறவன் அந்தஸ்தானத்தை யடைகிருன். ஜலமானது வருஷத்துக்கு ஸ்தானம்—அதை யறிகிறவன் அந்த ஸ்தானத்தை யடைகிருன்.

యోఽప్సు నావం ప్రతిష్ఠితాం వేద । ప్రత్యేవ తిష్ఠతి ॥

எந்தபுருஷன் ஜலத்தினிடத்தில் ஓடம் திருடமாக விருக்கிறதாக அறிகிருனே அவன் எப்பொழுதும் அதிலேயே ஸ்திரமாக இருக்கிறவனுகிருன்.

కింతద్విష్ణోర్బలమాహుః । కా దీప్తిః కిం పరాయణం । ఏకో యద్ధారయద్దేవః । రేజతీ రోదసీ ఉభే ॥

பிரகாசித்துக்கொண்டிருக்கிறதும், இரண்டாயிருக்கிறதுமான இகபரலோகங்களை எந்த விஷ்ணு ஒருவனுயிருந்து தரிக்கிருனே, அந்த விஷ்ணுவுக்கு வலுவை எதுவாகச்சொல்லுகிருர்கள்? அவனுக்கு (வேறே) பிரகாசம் எது? சகாயபூதமான வஸ்து எது? (இல்லை.)

వాతాద్విష్ణోర్బలమాహుః । అక్షరాద్దీప్తిరుచ్యతే । త్రిపదాద్ధారయద్దేవః । యద్విష్ణోరేకముత్తమం ॥

விஷ்ணுவுக்கு வாயுவை வலுவாகச்சொல்லுகிருர்கள்; அழிவில்லாத (தனக்குத்தானே யுண்டாயிருக்கும்) காந்தி சொல்லப்படுகிறது. திரிபாத்விபூதியிலிருந்து அந்தத்தேவன் அவைகளைத் தரித்தான். விஷ்ணுவாகிய தேவனுக்கு எந்தஸ்வரூபமுண்டோ, அதுஒன்றே உத்தமமானது.

రాజాధిరాజాయ ప్రసహ్యసాహినే । నమో వయం వైశ్రవణాయ కుర్మహే । స మే కామాన్ కామకామాయ మహ్యం । కామేశ్వరో వైశ్రవణో దదాతు । కుబేరాయ వైశ్రవణాయ మహారాజాయ నమః ॥

அரசர்களுக்கு அரசனுயும், பலவந்தமாகச் சத்துருக்கள் இலாபங்களை யடையாமற்செய்கிறவனுயும், விசேஷமாகக் கேட்கப்படுகிறவனுயுமிருக்கிற அப்பகவான் பொருட்டு, நாங்கள் நமஸ்காரஞ் செய்கிறோம். காமங்களுக்கு ஈச்சுவரனு யிருக்கிறவனும் விசேஷமாகக் கேட்கப்படுகிறவனுமான அந்தபகவான், என்ஞற் கோரப்பட்ட காமங்களை;—காமங்களைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும் என்பொருட்டுக் கொடுப்பானுக. பிரமாண்டமே சரீரமாகவுடையவனும், முறைப்பாட்டைக் கேட்கப்படுகிறவனும், மகாராஜனுமான பகவானுக்கு நமஸ்காரம்.

ఓం తద్బ్రహ్మ । ఓం తద్వాయుః । ఓం తదాత్మా । ఓం తత్సత్యం । ఓం తత్సర్వం । ఓం తత్పురోర్నమః ॥

அந்தப்பிரணவசொரூபியாகியபகவானே சிருஷ்டிகர்த்தா, சர்வவியாபகன், பரமாத்துமசொரூபன், சத்தியன், சகலத்திற்குங்காரணமானவன், அவன்பொருட்டுநமஸ்காரப்புரிகிறேன்.

(இன்னும் வரும்.)

இதிகாசபுராண பிரகரணம்.

(விஷ்ணுபுராணத்திலிருந் தெடுத்தது.)

ஜயின பவுத்தமதப் பிரவர்த்தனை.

(௧௩0 ம் பக்கத் தொடர்.)

அந்தமாயாமோகன் நருமதாநதியின் கரைக்குப்போய் அங்கே சிரத்தையோடு தவஞ்செய்துகொண்டிருக்கிற அசுரரைக்கண்டு திகம்பரனாகவும் மழுங்கச் சிரைத்தலையுடையனாகவும் மயிற்றோகைக் கட்டைக் கையிலேந்தியவனாகவும் அவர்கள் கிட்டப்போய் "ஓ அசுரராஜாக்களே! எதற்காகத் தவஞ்செய்கிறீர்கள்? நீங்கள் செய்யுந் தவத்திற்கு இம்மையிற் பயனை வேண்டுகிறீர்களா, மறுமையிற் பயனை வேண்டுகிறீர்களா சொல்லுங்கள்" என்று இனிதாகச் சொல்லக்கேட்டு, அவ்வசுரர், ஓ புத்திமானே! நாங்கள் பரலோக லாபத்திற்காகவே தவஞ்செய்கிறோம். இவ்விஷயத்தில் நீர் என்ன சொல்ல நினைக்கிறீர் சொல்லுமென்று கேட்க, அதற்கு மாயாமோகன் ஓ தைத்தியர்களே! "உங்களுக்கு முத்திவேண்டுமாகில் நான் சொல்லுந் தருமங்களைச் செய்யுங்கள், மோக்ஷத்திற்கு வழியாயிருக்கிற இந்தத்தருமத்திற்கு ஏற்றிருக்கிறீர்கள், சந்தேகமில்லை. இத்தருமமே முத்திக்கு ஏற்றது இதைக்காட்டிலும்வேறான உயர்ந்ததருமமில்லை; இத்தருமத்தில் நீங்களிருப்பீராகில் சொர்க்கமானாலும் மோக்ஷமானாலும் வேண்டியதைப் பெறுவீர்கள். நீங்களெல்லாம் மகாபலவான்களும் புத்திசாலிகளுமாகையாலே இத்தருமத்திற்கே தகுந்திருக்கிறீர்கள்" என்று சொல்லி யனேகவிதமான யுக்திப் பிரமாண தர்க்கங்களினாலே அவர்களை வேதமார்க்கத்தினின்று மிழுத்துவிட்டான்.

அன்றியும், "இது தருமத்தின்பொருட்டுமாகும், அதருமத்தின் பொருட்டுமாகும். இது சத்துமாயிருக்கும் அசத்துமாயிருக்கும், இது மோக்ஷத்தின் பொருட்டாகும் மோக்ஷத்தின் பொருட்டாகாது, இது மிகவும் பரமார்த்தமாயிருக்கும் பரமார்த்தமாயிராது. இது செய்யத்தகுந்ததுமாய் செய்யத்தகாததுமாயிருக்கும். இது இப்படிப்பட்டதன்று இப்படிப்பட்டதுதான். இது திகம்பரருடைய தருமமாயும் வெகு வஸ்திரந் தரித்தவருடைய தருமமாயுமிருக்கின்றது" என்று ஏழுவிதமான (அனேகாந்த) ஒருபடிப்படாத வாதங்களைக்காட்டி அவ்வசுரர் தருமங்களைவிடும்படி செய்தான். "(அர்ஹத) தகுந்திருக்கிறீர்கள்" என்று அடிக்கடி சொல்லிவந்தபடியினாலே அவனுக்கு அருகனென்றும், அவர்களுக்கு (ஆர்ஹதர்)என்றும் பேருண்டாயிற்று. இப்படி * அருகமதபோதனையினாலே அத்தைத்தியர் கலங்கி வேததருமங்களைவிட்டு அந்தத்தருமத்தையே சிரத்தையோடு கைக்கொண்டு நடந்தார்கள். இப்படி இவர்களாவதுமல்லாமல் இவர்களுடைய போதனையினாலே பிறரும், அவர்களினாலேமற்றும் பிறரும், அவர்களாலே இன்னும் பிறருமாகச் சிலநாட்களுக்குள்ளேயே அநேகர் அவ்வருகமதத்தரானார்கள்.

இப்படியான பின்பு அம்மாயா மோகனானவன் அவ்வேடத்தைவிட்டுச் சிவந்தவஸ்திரந் தரித்தவனாய் ஜிதேந்திரிய ரூபங்கொண்டு மற்றுமுள்ள அசுரரிடத்துக்குப்போய் சாந்தமாயும் மதுரமாயும் சிலவார்த்தைகளைச் சொன்னான். ஓஅசுரரே! "நீங்கள் இப்போதுசெய்துவருந் தருமம் சுவர்க்கத்திற்காகவா அல்லது மோக்ஷத்திற்காகவா எதற்கானாலும் ஆகட்டும். ஜந்துஹிம்சையுள்ள இந்தத் துஷ்ட தருமங்களாலே பயனுண்டோ, போதும்போதும் நான் சொல்வதை யறிந்துகொள்ளுங்கள்; காணப்படுகின்ற சகலமும் விக்கியானமயமென்று அறியுங்கள்; இது நல்ல ஞானிகள் சொன்னது. ஆதலாலே உலகமெல்லாம் விக்கியானமென்றே உணர்ந்துகொள்ளுங்கள். இவ்வுலகமெல்லாம் யாதொரு ஆதாரமுமில்லாததுமாய் பிராந்திஞானத்தினாலுண்டான பொருளாயுமிருக்கின்றது." இப்படி அநாதியாகவே தோஷமுள்ளதாய் மிகவும்சம்சாரசங்கடத்திலே சுழன்றுகொண்டிருக்கிறது. இக்காரியமெல்லாம் இப்படியே "(புத்யத புத்யத) அறிந்துக்கொள்ளுங்கள் அறிந்துகொள்ளுங்க" ளென்று அடிக்கடி சொன்னதனாலே, புத்தன் என்கிறபெயருள்ளவனாகி அந்தமாயாமோகன், வேதவிரோதமான யுக்திகளினாலே அந்த அசுரரையெல்லாம் மோகிப்பித்து, வேததருமங்களை விடச்செய்தான். இவ்வாறுசொன்ன பலவகைப்பட்ட யுக்திவார்த்தைகளினாலே அவ்வசுரர் வைதிகதருமங்களைத்தாங்கள் விட்டதுமன்றிப்பிறருக்கும்போதித்துவிடச்செய்தார்கள். இவ்விதமாக அவரவர்களாலே பிறர்பிறர் போதிக்கப்பட்டுப் பவுத்தசமயத்தைக் கைக்கொண்டு வந்தார்கள்.

---

* அருகமதமென்றாலும், ஜயினமதமென்றாலும் ஒன்றாகும்.

பின்பும் அந்த மாயாமோகன் வேறுவிதமான அனேகபாஷாண்ட கற்பனைகளினாலே இன்னுமனேக அசுரரை மோகிப்பித்து வைதிகமார்க்கத்தை விடச்செய்தான். சொற்பகாலத்துக்குள்ளே மாயாமோகனாலே இப்படியாகப்பட்ட அசுரரில், சிலர் வேதத்தையும் சிலர்தேவர்களையும் மற்றுஞ் சிலர் யாகாதி கருமங்களையும் இன்னுஞ் சிலர் பிராமணரையும் தூஷிக்கத்தலைப்பட்டார்கள். அவர்கள் நிந்தித்த விதங் கேளும்; இம்சை மகாபாவமென்று சொல்லிய வேதமே மறுபடியும் அந்த இம்சையைத் தருமசாதனமாகச் சொன்னது எவ்வளவும் யுக்திக்கு ஒத்ததன்று. அக்கினியிற் சாலித்த அவிசுகள் எரிக்கப்பட்டுச் சாம்பலாய்ப் போனவை பயனைத்தருமென்பது ஒன்றுமறியாத சிறுவர் பேச்சைப் போன்றதாம். அநேக யாகங்கள் செய்து இந்திரத்துவம் அடைந்தவன் வன்னிக்கட்டை முதலான கட்டைகளைத் தின்னும்படி நேரிடுமானால் அக்கட்டைகளின் இலைகளைத்தின்கிற மிருகப்பிறப்பே இந்திரஜனனத்திலும் விசேஷமன்றோ? யாகத்திற் கொல்லப்பட்ட பசுவுக்குச் சொர்க்கம் உண்டாகிறதானால் அந்த யஜமானன் தன்பிதாவையே யாகத்திற்கொல்லலாமன்றோ? சிரார்த்தத்தில் ஒருவன் புசிக்க மற்றொருவனுக்குத் திர்ப்தி யுண்டாகுமானால் வழிநடக்குந் தன் பந்துக்கள் சோற்றுமூட்டை சுமந்து வருத்தப்படாமலிருக்கும்படி, ஜனங்களேன் மற்றொருவருக்கு அன்னமிடக்கூடாது? பார்த்தீர்களோ அசுரரே! புத்திசாலிகளான நீங்கள் இதை நம்பாமல் உபேக்ஷை செய்வதே நல்ல காரியமாம். ஓ மகா அசுரரே! ஆப்தவாக்கியம் ஆப்தவாக்கியம் என்று ஒன்று நீங்கள் சொல்லுகிறீர்களே? அதென்ன ஆகாசத்திலிருந்து குதித்ததோ! இல்லையே? ஆதலால் யார் சொன்னாலும் யுக்தி யுக்தமாயிருக்கிற வாக்கியத்தைத்தான் நானும் உங்களைப்போன்ற புத்திசாலிகளும் அங்கீகரிக்க வேண்டுமேயல்லாமல் வறுமே யொருநம்பிக்கைவைத்து அங்கீகரிக்கலாகாது என்றிப்படி மாயாமோகன் சொன்ன வஞ்சனை வாக்கியங்களினாலே அவ்வசுரரிலொருவனாலும் வேதத்தை விரும்பினானில்லை.

இவ்வாறு அசுரரெல்லாம் வழிதப்பி நடக்கக்கண்டு அந்தத்தேவதைகள் மிகவு முயற்சியோடு யுத்தசன்னாசஞ்செய்து மகத்தான யுத்தத்தை நடத்த அருதாபுத்தசதிலே நல்வழிக்கு விரோதிகளான அவ்வசுரரெல்லாம் மடிந்துபோனார்கள். முன்பு அவ்வசுரர் வைதிகமதாசாரமாகிய பலமுள்ள கவசத்தைப் பூண்டிருந்தபடியினாலே சத்துருக்களுக்கு அசாத்தியராயிருந்தார்கள். பின்பு அக்கவசமாகிய காப்பு இல்லாமையாலே எளிதிலே ஜயிக்கப்பட்டுப் போனார்கள். எந்தச்சனங்கள் அப்படிப்பட்ட துர்மதங்களிற் பிரவேசித்தவர்களோ அவர்களெல்லாம் வேதமென்னுங் காப்பையிழந்தமையாலே நக்னரே யாவார்கள். இங்கு பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சன்னியாசி என்று நான்கு ஆசிரமத்தோரே யல்லாமல் ஐந்தாவதொருவனில்லை. ஒருவன் கிருகஸ்தாச்சிரமத்தை விடுவானாகில் அவன் வானப்பிரஸ்தாச்சிரமமாகிலும் யதியாச்சிரமமாகிலும் உடனே யடையவேண்டும். அப்படியின்றி யாதோராச்சிரமத்தையும் அடையாமலிருப்பானாகில் அவனும் நக்னனென்றே சொல்லப்படுவான். எவன் வேதம் விதித்த நித்திய கருமங்களைச் செய்யச் சத்தியுள்ளவனாயிருந்தும் செய்யாமல் விடுகிறானோ அவன் அந்த நாளிலேயே பதிதனாகிறான். ஆகிலும் பிராயச்சித்தத்தினாலே அவன் சுத்தனாகலாம். ஒருவன் யாதொரு ஆபத்துமில்லாமலிருக்க ஒரு பக்ஷகாலம் நித்தியகருமங்களை விடுவானாகில் அவன் விசேஷமாய்ப் பதிதனாகிறான். அப்படிப்பட்டவன் மகாப்பிராயச்சித்தத்தினாலே சுத்தியடையலாம். ஒருவருஷகாலம் எவன் நித்தியக்கிரியை செய்யாமல் விட்டானோ அவன் மகாபாதகமுள்ளவன். அவனைப் பார்த்தவன் அந்தத் தோஷம் நிவிர்த்தியாகும்பொருட்டு சூரிய தரிசனஞ்செய்யவேண்டும். அந்த மகாபாவியைத் தீண்டினால் உடுத்த வஸ்திரத்தோடு ஸ்நானஞ்செய்யவேண்டும். அந்தப்பாவிக்கோ யாதொரு பிராயச்சித்தமுமில்லை. தேவரிஷி பிதுர்பூதங்கள் எவன்வீட்டில் பூசிக்கப்படவில்லையோ அவனைக்காட்டிலும் பாவி யுலகத்திலில்லை. எவனுடைய வீடும் உடம்பும் தேவர் முதலானோருடைய இன்பமில்லாத பெருமூச்சினாலே கெட்டிருக்கின்றனவோ அந்தப் பாவியோடுகூட உட்காருதல் முதலான சம்பந்தத்தைச் செயலாகாது அப்படிப்பட்ட பாவிகளோடு ஒருவருஷகாலம் சம்பாஷித்தல் க்ஷேம விசாரணை செய்தல் கூடவிருத்தல் முதலானவைகளைச் செய்பவனுக்கு அவனோடு சமானமான பாதகமேயுண்டாகும். அந்த மகாபாதகி வீட்டிலுண்பதும் ஒருபடுக்கையிற் படுப்பதும் ஓரிடத்திலே கூடியிருப்பதுமாகிய விசேஷசம்பந்தங்களைச் செய்பவன் உடனே அவனைப்போல் மகாபாதகனாவான்.—(இன்னும் வரும்.)

ஆரியமத சித்தாந்தப் பிரகரணம்.

அத்வைதமதம்.

(௧௨0-ம் பக்கத்தொடர்)

இவ்வுலகத்தில் நான் செய்கிறேன், நான் செய்விக்கிறேன், என்று சொல்லுகிற எல்லாருடைய அனுபவத்தினால் இந்த தேகத்தில் தேகாபிமானியாயிருந்து கொண்டு "அஹம்" நான் என்கிற சப்தத்திற்கு அர்த்தமாக எந்த ஆத்மா விருக்கிறானோ, அந்த ஆத்மாவுக்குக் கருத்திருத்துவத்தைச் சொல்லவேண்டியதாயிருக்க, அவனைவிட்டு மூன்றுவித கரணங்களுக்கும் கருத்திருத்துவம் எப்படிச் சொல்லப்படலாமென்றாலோ, ஆத்மா, அவிகாரி, நிஷ்கிரியன், சுவகதபேதமில்லாதவன் (அவயவமற்றவன்) ஆகையினாலே ஆத்மாவுக்குக் கருத்திருத்துவம் சொல்லக்கூடாது. ஆனால் கருத்திருத்துவம் ஆத்மாவுடையது போல் விளங்குகிறதே, கருத்தா வேறே காணவில்லையே யென்றாலோ, ஆத்மாவிடத்தில் காணப்படுகிற கருத்திருத்துவமானது, ஆரோபத்தினாலேயே யன்றி. சுவபாவமாயில்லையென்று அறியவேண்டியது. சுவபாவமென்றே சொல்லாமென்றால் வேதாந்தவிசாரஞ்செய்து என்னுடைய கருத்திருத்துவத்தை நிவிருத்தி செய்துக்கொள்ள வேண்டும், இது போகாவிட்டால் சம்சாரபெந்தம் விடாது, என்று ஒவ்வொருவனும் செய்கிற பிரயத்தினம் வீணாவதாக முடியும். ஆத்மாவுக்குக் கருத்திருத்துவம் சுவபாவமாகவே யிருக்கட்டும்; பிரயத்தினவிசேஷத்தினால் நசித்துப்போகட்டுமே யென்றால் சுவபாவமென்பது சுவரூபமானதினாலே, சுவரூபம் நசிக்க எவன்தான் பிரயத்தினம் செய்வான்! சுவரூபநாசமானால் எவன்தான் புருஷார்த்தத்தை யனுபவிப்பான்! அகருத்தாவாகிற ஜீவன் முக்தியேயில்லையென்றால், வேதாந்தசம்பிரதாயமும் குருசிஷ்யர்களுமில்லாமல் போகும்; பின்னும் ஆத்மா அகருத்தா சாக்ஷி கிரியை யற்றவன், என்று சொல்லுகிற "நிஷ்களம் நிஷ்கிரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்சனம் ஸாக்ஷிசேதா கேவலோ நிர்க்குணச்ச" இது முதலிய சுருதிகளுக்கு ஹானிவரும். சுஷுப்தியில் ஆத்மாவிருந்தும் கருத்திருத்துவம் காணப்படவில்லை; கருத்திருத்துவம சுவபாவிகமானால், அக்கினியில உஷ்ணம் போல (சுஷுப்தியிலும்) காணப்படும். அப்படிக்காணப்படவில்லை ஆகையால், ஆத்துமாவுக்குக் கருத்திருத்துவம் சுவபாவமானதல்ல. தச்சன் முதலியவர்களுக்குக் கருத்திருத்துவமிருந்தாலும் ஸ்நான காலத்திலும் போஜனகாலத்திலும் (உளிவாசி முதலிய) ஆயுதங்களாகிய கரணங்களில்லாததினாலே, கருத்திருத்துவம் காணப்படாததுபோல, சுஷுப்தியில ஆத்மாவுக்கு இந்திரியாதிகரணவியோகமானதினால் கருத்திருத்துவம் காணப்படவில்லையென்று சொல்லுவோமென்றால் அப்படியல்ல, (ஒன்றும் செய்யாமல் மௌனமாயிருக்கிறதாகிய) தூஷ்ணீம் பூதாவஸ்தையில் அந்தக்கரணசேர்க்கை யிருந்தும், கருத்திருத்துவம் காணப்படாததினாலே, ஆத்மாவுக்குக் கருத்திருத்துவம சுவாபாவிகமல்ல, மற்றெதுவென்றாலோ ஆத்தியாஸிகமே (ஆரோபிதமே).

ஆத்தியாசிக மென்பது யாது?

ஒன்றினுடைய தருமங்கள் மற்றொன்றினிடத்தில் காணப்படுதல் தான். எப்படியென்றால், ஓடத்தின் ஓட்டம் நதிக்கரையிலிருக்கிற மரங்களிலேயும சலிக்காமலிருக்குந் தன்மையுடைய மரங்களின் தருமம் ஓடத்திலும் எப்படி விளங்குகிறதோ! அப்படிப்போல, மூன்றுகரணங்களுடையதாகிய கருத்திருத்துவம் ஆத்மாவிலும், ஆத்மாவிடத்திலுள்ள அகருத்திருத்துவம் மூன்று கரணங்களிலும் விளங்குதல் அஞ்ஞானத்தினாலேதான் ஆகையினாலே, ஆத்மாவுக்குக் கருத்திருத்துவம் ஆரோபிதமென்று அறியத்தக்கது.

மூன்றுவித கரணங்களும் அசேதனமானதினாலே அதற்கெப்படிக் கருத்திருத்துவமுண்டாகும்? கரணங்களுக்கே கருத்திருத்துவமுண்டென்றால் அவைகளுக்குவேறேகரணங்கள் வேண்டுமே? என்னும் பக்ஷத்தில் உலகத்தில் அசேதனமான வாயுவுக்கும், அசேதனமான ஜலத்திற்கும், மரம்முதலியதை வேருடன் பிடுங்குவதிலும், அவைகளை தூரத்தில் கொண்டுபோய்ப் போடுவதிலும், காரணமன்றியிலேயே கருத்திருத்துவம் காணப்படுவதுபோல், மூன்றுவித கரணங்களுக்கும் வேறே கரணங்களன்றியிலேயே, கருத்திருத்துவமிருக்கக்கூடும், என்பதேயாம்.—மேலும் வேதாந்த சாஸ்திரங்கள் பிரதிபாதிக்கும் பிர்மம், கூடஸ்தன், ஈச்சுவரன், ஜீவன் இவற்றினிலக்கணங்களாவன:—

எப்போதும் பூரணமாய்த் தனக்கு முந்தி ஒருவருதவும் காரணமாயில்லாமல் தனக்குப்

பிந்தி யொருவஸ்துவும் காரியமா யல்லாமல் தன்னிடத்தி லொருவஸ்துவுமில்லாமல் தனக்கன்னியமா யொருவஸ்துவுமில்லாமல் யாதொரு சைதன்னியம் ஏகமாயிருக்கின்றதோ? அதுதான் பிர்மம்.

மாயாகாரியங்களனைத்தையும் தள்ளிவிட்டு, பிரபஞ்சவிலக்ஷணமாய், பிரபஞ்ச வதிஷ்டானமாய், மாயாதத்காரிபாதிதமாய், திரிவிதப்பரிச்சேத சூனியமாய், ஸர்வத்ராநு சூதமாயிருக்கிற பரமாத்ம சைதன்யந்தானே லக்ஷியார்த்தமென்று சொல்லப்படும்; அதுவே பிரத்திம்பகாத்துமாவா யிருக்கிறது கூடஸ்தன்.

மாயையும், மாயாதிஷ்டான சைதன்யமும், மாயையிற் பிரதிபிம்பித்த சைதன்யமுங்கூடி ஈச்சுவரன் என்று சொல்லப்படும்.

அந்தக்கரணம், அதிஷ்டான சைதன்யம், அந்தக்கரண சைதன்யம் மூன்றுங்கூடி ஜீவன் என்று சொல்லப்படும்

இவற்றிற்குத் திருஷ்டாந்தம் மகாகாசம், மேகாகாசம், கடகாசம, ஜலாகாசமாம்.

அந்தக்கரணசலனத்தினால் ஜீவன்சுகதுக்காதிகளைப் புஜிக்கிறவனாகத் தோற்றப்படினும், ஆத்மா நிர்விகாரியென்பதிற் சம்சயமென்னை? சற்றாழ்ந்து ஆலோசிக்கின் ஆத்மன் விகாரியுமல்லன், நிர்விகாரியு மல்லனாம்.

இவ்விதசம்பாஷணை முழுப்பூசணைக்காயைப் பிடிச்சோற்றினுள் மறைக்குந் தன்மையை நிகர்க்குமே உலகவிவகாரம் பிரத்தியக்ஷமாயிருக்க ஒன்றுமில்லையெனச் சாதித்த லெங்ஙனமமையப்பெறுமெனிற் கூறுதும்.

கைவல்ய நவநீதம்.

பங்கையாசனன் முதற்பலதேவரும் பாருள பெரியோருங், கங்கையாதியாந் தீர்த்தமுந்தேசமுங் காலமு மறைநாலு, மங்கமாறு மந்திரங்களுந்தவங்களு மசத்திய மெனச்சொன்னா லெங்கணையனே யதனாற் குற்ற மில்லையோ மொழியீரோ.

சொர்ப்பனந்தனிற் கண்டவைதப்பொய்யென்று சொல்வது பிழையாமோ, வற்பமாயையிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழையாமே, சொப்பனந்தனிற் கண்டதைப்பொய்யென்று சொல்லலா மெனின்மைந்தா, வற்பமாயையிற் றோன்றிய சகமெலா மசத்திய மெனலாமே,

பொய்யைமெய்யென்றமூடர் புண்ணியரென்று புராணங் கூப்பிடுமானால், மெய்யைமெய்யென்ற ஞானிக்குக்குற்றங்கள் விதித்தசாத்திர முண்டோ, பொய்யதேதெனி னாமரூபங்களாம் பூதமாகிய மாயை, மெய்யதேதெனிற் சச்சிதானந்தமாய் வியாபிக்கு மான்மாவே.

மேற்கண்ட குருசிஷ்யசம்வாதத்தால் பிர்மமொன்றுமே நித்தியமென்றும், ஜெகத் தனித்தியமென்றும், இவ்வண்டாண்ட பிர்மாண்டங்களனைத்தும் அகடித கடனா சாமர்த்தியத்தையுடைத்தாகிய மாயையினது விசித்திர லீலையென்றும், ஸ்பஷ்டமாய் விளங்குவதால், அம்மாயையி னிலக்கங்களைக் குறித் தினி விசாரிப்போமாக.

மாயையென்பது அஞ்ஞானம், அவித்தை, தமஸ், மோகம், மூலப்பிரகிருதி, பிரதானம், குணசாமியம், அவ்வியக்தம் என்று (பல பெயர்களால்) சொல்லப்படுகிறது. இதின் ஸ்வரூபலக்ஷணம் எப்படியென்றால் அதைச் சொல்வது அசாத்தியம், ஏனென்றால் இந்த மாயை சத்துமல்ல, அசத்துமல்ல, அவ்விரண்டு சேர்ந்ததுமல்ல, வேறானதுமல்ல, வேறல்லாததுமல்ல, அவ்விரண்டுமல்ல, பின்னையென்னவெனில் அநிர்வாச்சியமே (வாக்கினால் சொல்லத் தகுந்ததல்லாதது) ஏன் சத்துமுதலியவை அல்லவென்றால்! தத்துவஞானத்தினால் பாதிக்கப்படுகிறதினாலே சத்தல்ல; முயற்கொம்பு, மனிதக்கொம்பு, ஆகாசத்தாமரை இவைபோல அசத்துமல்ல ஏனென்றால்? நான் அஞ்ஞானியென்று சகலராலும் அநுபவிக்கப்படுகிறதினாலேதான். ஒன்றுக்கொன்று விரோத சுவரூபமானதினால் சதசத்துமல்ல ; (சத்து மசத்தும் ஒன்றுக்கொன்று விரோதசுவபாவம் எப்படியென்றால் வெளிச்சமும் இருளும்போல ஒன்றிருந்தால் மற்றொன்றிருக்கமாட்டாது) ஸ்தூல ஆகாசமே சூக்ஷ்மமானது அதைக்காட்டிலும் சூக்ஷ்மம் (தன்மாத்திரை) என்கிற அபஞ்சீகிருத ஆகாசம் அதைக்காட்டிலும் சூக்ஷ்மமானவை சத்துவாதிகுணங்கள் அவைகளைக் காட்டிலும் சூக்ஷ்மமானது, அக்ஞானம் ஆகையினாலே அக்ஞானமாகிய மாயையானது, இவ்வித சூக்ஷ்மத்திற்கெல்லாம் மூலகாரணமாயிருப்பதினாலே அவயவமுள்ளதல்ல ; அதுவே ஸ்தூலபதார்த்தமாகிய ஜகதாகாரமாய் பரிணமிக்கிறதினாலே அவயவமில்லாததுமல்ல; ஒன்றுக்கொன்று விரோதமானதால் உபயாத்மகமுமல்ல ; ஆதபாவைக்காட்டிலும் (அஞ்ஞானமானது) அந்நியமானதென்றால் அத்துவைத சுருதிகளுக்கு விரோதமானபடியினாலேயும் ஆத்மசத்தைத்தவிர வேறே சத்தில்லாததினாலேயும் அந்நியமானதல்ல ; அந்நியமல்லவென்றால் ஆத்மாவுக்குச்சத்தியில்லையென்று சொன்னதாகவாகும்.

(இன்னும் வரும்.)

அத்துவைத மத விரோத விளக்கம்.—(தொடர்.)

நான்காம்பத்து.

மறைதனைச்சத்திய நித்தியமென்று மன்னுமிவ்வுலகினிற்பெரியோ
றறைவர்கள்மற்ற பனுவல்களியாவு மம்மறைபொருந்திலுண்மையவாம்
நிறைமறிவமர்ந்த வியாதமாமுனிவர் நிருணயித்திருப்பதம்கொவ்வாத்
துறைபொருணூற்க ளவைதிகமெனவே துணிந்தவர்மூதறிவினரே. (க)

முக்குணத்திலகு முகியவுயிர்கண் முற்றுமேபயன்பெறமுயல
எக்குணத்தவர்க்கு மேற்கும்பன்மார்க்க மியம்புமவ்வேதமாதலினன்
இக்கடல்சூழு முலகிற்பைங்கூழ்க ளெத்தனைவேற்றுமையுறினும்
தக்கவையாவு மாமதுபோலச் சாற்றுமிச்சுருதியின்பொருளே. (உ)

ஆதலாற்சுருதி யுரைப்பவையாவு மையமிலுண்மையேயாகும்
போதமேவிளக்கும் வேதமென்றெனுமப் பொருட னுக்கிழுக்குரைப்பவரியார்
சீதளமதியை யாதவனெனவே செப்புவபோன்மறுநூலின்
வாதிக்கும்பொருட்க ளவைகட்பொருந்தின் வாய்மையாங்குதர்க்கமாம்பிறவே. (ங)

வாய்மையாமொருநூ லாதியிலுரைத்த வவைகளைமறுத்துப்பின்வழங்கின்
தூய்மையாமுண்மை யாதுபொய்யாது தோன்றுவபுகல்வர்நேர்ச்சொல்லாம்
ஆய்திறமுடையோ ரவைகளைப்பொருத்தி யர்த்தநிச்சயத்தையுந்தேர்ந்து
வாய்த்தமைகொள்ளும் வல்லவரெவரோ வகைதெரியூகிகளாவார். (ச)

தத்துவம்பலவு மொன்றெனும்பகரும் சத்தியவேதமாலகையினன்
நித்தமனித்த மிவைகளிவியாது நேர்ந்திடுமுண்மைதானெவைக்கு
ஓத்துமையில்தால் விசுவசித்த லுக்கு முற்றவையாமெனவினவின்
கர்த்தனுமுண்டு காரியமுளதாற் காண்பவையுண்மையாம்பொருளே. (ரு)

நித்தியப்பொருளாய்க் கர்த்தன்றானிற்கி னித்தியமாய்க்காரியமுநிகழும்
வத்துவாமதற்குச் சத்திலாதிலைமை வாய்த்தல்நேராததின்வகைபோல்
சத்துடையதுதான் வத்துவாபத்தோன்றுஞ் சத்தியத்தன்மையும்பொருந்தும்
மித்தையேயிலையத் தோற்றமுமியாது மெய்யுடற்பொய்யதாமதுவே. (சா)

பொய்யெனப்புகலல் வடிவமாறுதலும் பொருந்துகற்பவுதிகத்தன்மை
ஐயமிலாம லகமெனத்தோன்று மறிவுறுமாத்துமஞ்சரதம்
வையகமுழுதும் தோற்றுவித்தடக்கும் வத்துவாம்பிரமமுஞ்சரதம்
செய்வதுசரதம் செய்கையுஞ்சரதம் செயப்படுபொருளுஞ்சத்தியமே. (எ)

பிரமமேதத்து வங்களின்முதலாய்ப் பிறங்குதற்காரணமாதல்
பரமமாந்தருமியாதலுமற்றுந் தருமமாய்ப் பரவுதலானும்
உரிமையாம்பிரமாண் டங்களுமத்தியி லுளகனிமெனவுட்டற்றுங்கி
ஒருமையாயுபிரு மெய்யெனப்படலா லொன்றெனுந்தத்துவஞ்சுருதி. (அ)

ஆதலாற்சுருதி தத்துவம்பலவு மொன்றென வறைதற்சத்தியமாம்
தீதிலாதந்தத் தத்துவமொழிக்கு முண்மையே நேர்பொருளாகும்
நீதிசேர்ந்தவுலகி னெற்குவியலைப் பிதெசரு நெல்லெனச்சொலும்போல்
வேதமோதிடுஞ்சொ லொருமையும் மண்மையாய் விளங்கும்பல்பொருட்கள்கூட்டுறவால்.

பொறிகளாற்காண்டுங் காக்ஷிபாமைத்தும் புலன்களின்காரியமாகும்
அறிவதுநேரா யிவைகளைத்தூண்டி யகமுறுமானதக்காக்ஷி
திறவுகோலதற்கு மன்னுஞ்சீவான்மா தேகியும்போகியுமதுவாம்
குறிகொளுஞ்சாக்ஷி யாகவான்மாவில் குடிபுகுமதுபரமாத்மா. (க0)

இவ்வகைவேதச் சிரப்பொருளதனை யெடுத்துரைப்பிரமசூத்திரங்கள்
செவ்வையாயாய்ந்து வியாதரின்கருத்தைத் தேர்ந்துரைபாஷியமுறையான்
தெய்வமாய்விளங்கும் தேசிகராமாநுஜன் றிருவடிகளைப்பணியும்
மெய்யடியார்க்கடி யான்சக்கரபாணி விருப்புடன்விளம்புமிப்பத்தே. (கக)

ஐந்தாம்பத்து.

மலினத்தையகற்று மங்கியின்மலினம் மருவுவதெனும்வகைபோல
அலகிலானந்த வடிவனுய்ச்சுத்த ஞகியபிரமத்தின்சொருபத்
திலகுமச்சருவஞ் ஞதையினி லவித்தை யியல்வதாமெனி னசங்கதமாம்
விலையுயர்மணியைப் பருக்கைக்கலெனுமவ் விவேகிகளுஞ்சிலருளரோ. (க)

பகுதியுமாயைப் பிரதானமாமிப் பெயர்பரியாயமாஞ்சொற்கள்
பகுதிவிகார மாயையின்விசித்திரச் சிருட்டிக்குக் கடவதாய்ப்பயிலும்
விகுதிகள்பலவும் பகுதியின்விதிகள் விதேகியாஞ்சிவனுக்குடலாய்
தகுவிருபதினுன் கெனுந்தொகைமேவி தருமவைபோகமோகங்கள். (உ)

முக்குணமெனு முப்புரியதாங்கயிற்றுன் மூன்றுகாலத்திலும்பிணைப்பட்
டக்கயற்கண்ணி யகப்பட்டவலகைபோ லலைந்துதுன்பத்தினிலாழ்ந்து
சிக்கமாம்பாச பந்தத்திலுழலும் ஜீவனுமீசனுகுவனே
மிக்கவைபேசிற் பயனிலைமின்மினி யாதவனுய்விளங்கிடுமோ. (௩)

கனகராசிதன் கனவினிற்கண்டு களிக்குமாப்போலவேஜீவன்
புனிதமாம்பிரமந் தானெனக்கோடல் புல்லியகுன்றுமேநவதோ
வினதையின்மகற்குப் பரவைகணேரோ வேறொருகாளையையொவ்வா
வனிதையைப்புருட னெனவசனிக்கின் வாய்மையாய்க்கொள்பவரியாரோ. (௪)

ஈட்டியவினையின் பயனதாலெடுமித் தேகத்திலின்பதுன்பங்கள்
கூட்டுமவ்விதியின் காரியமாகக் குறிக்குமச்சாத்திரப்படியே
வேட்டுதன்ஞான மவித்தையைப்போக்க விரும்புதல்பேரின்பவீட்டை
நாட்டியஜோதிட மநுபவமதனை னங்கையிற்கனியெனத்தோன்றும். (௫)

பற்பலதேவர் பதிகளும்வேறுய்ப் பயிலவர்தொழிற்களும்பலவாய்
நிற்குமந்திரங்கள் வேள்விகள்வெகுவாய் நிலையுறுசரிதை யோகாதி
நற்குருபோத மடையுமாணுக்கர் நன்மையுந்தீமையும்பொருந்தி
நிற்குமிவ்வுலகந் தோற்றமாத்திரமாய் நிகழ்ந்திடின் சூனியமாமே. (௬)

ஆதலாற்பிரம மாத்திரமுளதா யறிபவராரறிவேது
கோதிலாதந்தப் பரனேயேஜகமாய்க் கொள்ளிடின் விகாரமாங்குற்ற
மேதுவுமில்லா வதீதமாமதற்கே யிவ்விதநிலையுறைத்திடுமப்
போதமேனிகழும் வேதமேனெவர்க்கும் புண்ணியபாபமொன்றுளதோ. (௭)

ஆத்துமசித்த மறைந்திடுஞ்சுருதி வைக்கியமடையிலாதழியும்
எத்துமப்பரத்தி லின்பப்பேறெவைக்கு யாதுக்குமுத்தியிலாசை
தோத்திரம்நிந்தை தூய்மையுமலினந் தோன்றுமிவ்வொளியிருளொன்றாய்ச்
சேர்த்திடப்படுமோ வெப்படிப்பொருந்தும் தேவனுமுயிர்களொன்றுமோ. (அ)

நாவினில்மதுரஞ் சர்க்கரைஞானமாத்திரமே நல்குமாயின்
காவியமான துளதெனுமறிவுங் கற்பனையுந்தரல்வேண்டும்
மேவியவாக்கிய ஞானமேமுத்தி விளைத்திடினெழிந்ததுவருத்தம்
பூவியல்தெய்வ பூசனைகளும்வீண் பொழுதுபோக்கிடுந்தொழிலாமால். (௯)

சங்கரன்றனே சங்கராதி சகத்தினிற்தோன்றிஷண்மதங்கள்
பங்கமுறுமல் வேதமார்க்கத்தாற் பரிவுடனவைகளை நிறுத்திச்
சங்கைதீர்தேவ பூசனைதவமுஞ் சான்றதுர்யாசிரமம்பொருந்தி
துங்கமாமுத்தி யளிக்குங்கோவிர்தன் றுதியெனச்சொற்றதும்பொய்யோ. (க0)

வைதிகவாக்கிய பாவனையறிபார் வையகத்தினிற்சிலசியற்றங்
கைதவர்நூல்கள் கற்பனையாவுங் கண்டனைபுரிபெதிராஜன்
மெய்யடிக்கன்பன் சக்கரபாணி விளம்புமிவ்வொருபதும்பாவும்
உய்பவர்தங்கட் குரைப்பவையாக வுற்றிடுமுன்னமைபிதாமே. [வரும்.] (கக)

(சுகுணபோதினி.)

பெண்களுக்குக் கல்வி அவசியம்.

கல்வியானது விசேஷமாகப்பரவுகின்ற அதி நாகரீகமுள்ள நாடுகளிலும் சகல துஷ்கிருத்தியங்களும், ஆண் பெண்களால் செய்யப்படுகின்றனவே. அப்படியிருக்க, கல்வியினால் என்ன பிரயோசனமென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இதற்குச் சமாதானமாகச் சில உபமானங்களையெடுத்துக்காட்டினாற் போதுமென்று நினைக்கிறோம். ஒரு மருந்தை வியாதியால் வருந்துகிற பத்துப்பெயருக்குக் கொடுத்தால் பலர் பிழைக்கிறார்கள் ; சிலர் இறந்துபோகின்றனர். இதனால் மருந்தில் பயனில்லையென்று சொல்லி மருந்தைக் கொடாமலிருக்கலாமோ? உலகத்திலிருக்கும் ஒவ்வொருவியாதிக்கும் அனேகமருந்துகள் செய்யப்பட்டு வழங்கி வருகின்றன. ஆயினும், அவ்வியாதிகளா லிறப்போர்களை எண்ணி முடியாது. இதனால் மருந்திற்பயனில்லையென்றும், வைத்தியசாஸ்திரம் பொய்யென்றும் சொல்லலாமா? அழுக்கும் துர்க்கந்தமும் நிறைந்த விடங்களில் விசேஷமாக வாந்திபேதி உண்டாகிறதென்று வைத்தியர் சொல்லுகின்றனர். ஆயினும், சுத்தமான விடங்களில் அது உண்டாகிறதும், அசுத்தமான சிலவிடங்களிலது உண்டாகாமலிருப்பதையுங்கண்டு, வாந்திபேதி அசுத்தத்தினால் உண்டாகிறதில்லை, நம்மைச் சுற்றிலுமிருக்கிற அசுத்தத்தைநாம்நீக்க வேண்டியதில்லை, வாந்திபேதி வந்தால் பார்க்கலாமென்று சொல்லும்பைத்தியக்காரரும் உலகத்திலுண்டோ? ஆயினுங் கல்வியால் பெண்களுக்குப் பயனில்லை, அவர்களுடைய அறியாமை நீக்கவேண்டிய அவசியமில்லையென்னும் புத்திமான்களனேகரைக் கணக்கிடலாமல்லவா? இவர்கள் சற்றுயோசித்தால் தமது அபிப்பிராயம் பிசகென் றெளிதிலறிந்துகொள்ளலாமே! நமது பாவங்களுக்குக் காரணமின்னதென்று நிச்சயமாக அறியாவிட்டாலும், நமது அஞ்ஞானமே பெரும்பாலும் நமது பாவத்துக்கும் ஏதுவாயிருப்பதை ஒருவாறு காண்கிறோமல்லவா? நமது அஞ்ஞானமாகிய இருளை நீக்கி, அதனால் விளையுந் துக்கத்தினின்று மொருவாறு விலக முயலாமல், நாம் முன்னும் பின்னும் செம்மையாக அறியோம். செத்தாலும் சரியே, பிழைத்தாலுஞ் சரியே, இருந்தவிடத்தைவிட்டசையக்கூடாதென்று வீணெண்ணமிட்டுக்கொண்டிருக்கலாமோ? நமது கருமமாகிய பிணிக்கு ஒருமருந்து தேடாமல் வீணிலேமடியலாமோ? நமது கருமப்பிணியைப் போக்குவதற்குக் கல்வியும், கல்வியாலுண்டாகும் ஞான சஞ்சீவியையும் விட வேறு மருந்தை நாமறியோம். இது தவறாத மருந்தென்று சொல்லத் துணியமாட்டோம். ஆயினும் நமக்குத் தெரிந்தபின் இவ்வொருமருந்தையு முண்ணாமலிருப்ப தொண்ணுமோ? மேலும் இம்மருந்தைப் பூர்ணமாகச் சாதித்தாலன்றி, அதன் முழுப்பயனை அறியலாகுமோ? ஆதலால் நமது உயிருள்ளவளவிலும் இம்மருந்தை நாம் சாதிக்கவேண்டாமோ? நம்மி லொருபகுதியாயும், நமது வாழ்க்கைத்துணை நலமாகவும் படைக்கப்பட்டிருக்கும் பெண்களுடைய கருமங்களையும் அஞ்ஞானத்தையும் நம்மதுபோலவே பாவித்து, அவைகளை நீக்க முயலவேண்டாமோ? இந்நற்றொழிலில் அவர்களுடைய சுகத்துக்காகச் செய்யாவிடினும், நமது காப்புக்காயினும் அவசியம் செய்யவேண்டியதா யிருக்கிறது. எனது அண்டைவீட்டுக்காரனுடைய வீடுதீப்பற்றியெரிகையில் அவனுக்குச் சகாயஞ்செய்யாவிட்டாலும், என்வீட்டைக்காத்துக்கொள்ளும் பொருட்டாவது அத்தீயை அவிக்க முயலவேண்டும்.

பெண்களுடைய துச்சரிதை சகவாச தோஷத்தினாலே ஆடவர்களையு மொருவாறு மயக்கத் துன்மார்க்கத்தை மென்மேலும் பெருகச்செய்வது மன்றி, அவர்களுடைய மடமையும் பேராசையும் நேரே நமது புத்தியை மயக்கி அசத்தியத்துக்கும் அநியாயத்துக்கு முட்படுத்துமென்பதை யொருதிருஷ்டாந்தத்தால் காட்டுவோம். ஒருவன் சென்னைக் கல்விச்சங்கத்தில் வித்தியாப்பியாசஞ்செய்து யோக்கிய பத்திரம்பெற்று நாலைந்துவருஷம்படிப்படியே உத்தியோகத்தி லுயர்ந்து இப்பொழுது தாசில்வேலைசெய்வதாகப் பாவித்துக்கொள்வோம்; அவன் தனது கல்வியை வீணிலேபோகவிடாமல்,

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

என்று நாயனார் சொல்லியபடி யோக்கியா யோக்கியத்தையும், சத்தியாசத்தியத்தையுமறிந்து, யோக்கியத்தோடும் சத்தியத்தோடும் நடந்து, இலஞ்சம் வாங்குதல் முதலிய அநுசிதகாரியங்களைச் செய்யாமலிருக்க முயன்று வருகின்றான் ; உள்ளமட்டில் திருப்தியடைந்து அவனிருந்தபோதிலும், அவன் மணஞ்செய்துகொள்ளும் சீமாட்டிக்கோ சற்றுந் திருப்தியில்லை. "இதோ பாரும் அண்டைவீட்டு இராங்கன் நேற்றையமொட்டைப்பையன்; அவன் உத்தியோகஞ்செய்து மெத்தை வீடுகள் தோட்டந்

தாரவுகள் அமைக்கதமன்றி, மாதமாதம் ஆயிரமாயிரமாய்க் குவித்துக்கொண் டிருக்கிறான். நீர் என்ன சம்பாதித்தீர்! குடியிருக்க நல்லவீடுண்டா! கட்டுவதற்கு நல்ல சேலையுண்டா! போடுவதற்கு நல்ல உடைமையுண்டா! இத்தனைநாள் பெரிய உத்தியோகஞ்செய்தீரே! ஒரு நூறுவராகன் உடைமை போட்டதுண்டா! கைக்கும் வாய்க்குஞ் சரியாய்ப் போய்விடுகிறதே! நாளைக்குச் செத்தாலென்னை யார் காப்பாற்றுவார்! பிள்ளைகள் எப்படி அலையும்! இவ்வளவு பிரயாசைப்பட்டு வித்தை கற்றீரே, "காளிதோட்டத்து கற்பகம்போல் என்றபடியே என்ன பிரயோசனம்" என்று இவ்வாறு இச்சிமாட்டி பிரதிதினமும் அவன்செவியிலும் முகத்திலும் இடியைப்போ லிடித்துவருகிறாள்; அவனுக்கோ மனவருத்த முண்டாகி யோக்கியதையை விடவும் மனதில்லை; அவளை நீக்கியிருக்கவுங் கூடவில்லை; அவள் வார்த்தைக்குப் பதில்சொல்லவுங்கூடவில்லை. இவ்வாறுஇருதலைக் கொள்ளியி லகப்பட்ட எறும்புபோல் அலைந்துவர, அவள் உபதேசம் நாளாவட்டத்தில் தலைக்கேறுகின்றது. பெண்களுடைய துரபிமானமும், பிடிமானமும் மகாகொடியதென்றும், பெண்வார்த்தையைத் தடுப்பது அசாத்தியமென்றும் எத்தேசத்தாருஞ் சம்மதிக்கின்றனர். பெண்வார்த்தையைத் தடுக்கமாட்டாமலல்லவோ, தசரதன் இராமனை வனவாசஞ் செய்யவிட்டு பிராணனைவிட்டது! அப்பெண் வார்த்தைக்கிசைந்தல்லவோ இராமன் இராவணயுத்தத்தில் படாதபாடுபட்டதும்சீதையால் அபகீர்த்தி யடைந்ததும்! இவ்விதச் சரித்திரம் கிறிஸ்தவருக்கு முண்டு. ஈவ் என்பவள் இச்சையைத் தடுக்கமாட்டாமல் பூதம்சீவ தருவின் பழத்தைப் பறித்துத் தன்னையும் தன் சந்ததி யனைத்தையும் பாவத்துக்கும் மரணத்துக்கு முட்படுத்தினளென்று யூதவேதங்கூறுகின்றது. இம்மகான்களெல்லாந் தோற்றுப் போயிருக்கையில் அவன்ஜெயிக்கவல்லவனோ? மேற்கூறிய விசித்திரம் கற்பனை யென்று பலர் கருதினும், நம்மைச் சுற்றியு முள்ளவர் பீடிப்பதினால் நமது நேர்மையினின்றுஞ் சத்தியத்தினின்று மிழிந்துபோகக்கூடுமென்பதை யனுபவத்தாற் கண்டுகொள்ளலாம்.

இச்சரிதை சிலவிடத்து உண்மையாக நடக்குமாயினும், இதுவொரு பெருங்குறையென்று சொல்லலாமோ? ஆழ்கடலுக் கணுப்போலென்று சிலர் நினைக்கலாம். ஆயினும் அணுவே அண்டமாகுமாதலால், அணுவை இகழ்ந்து பராமுகமா யிருக்கலாகாது. ஆலின்வித்து அணுவாயினும் மரம் பெரிதல்லவோ? சற்று ஆழமாக யோசித்தால் அணுவைத்தான் விசேஷ கவனத்தோடு காத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் பெரியவைகள் தாமாய் நமது கவனத்தில் படியும்; சிறியவைகளோ நாம் எச்சரிக்கையாயிருந்தாலொழிய, பார்ப்பது அசாத்தியம். ஒருநிமிஷத்தில் உயிரைக்கொண்டுபோகும் வாந்திபேதிக்கு உடனே மருந்துதேடுவார்களாயினும், பலவருஷம் அணுவணுவாய் நமது பலத்தைக் குறைக்கும் க்ஷயத்தை அது மருந்துக்கிசையாத துர்ப்பலமடையும் வரையில் அனேகர் பாராட்டுவதில்லை. ஆதலால், நமது குறை சிறியதென்று அலக்ஷியமுஞ் செய்யலாகாது. பெண்களிடத்து நமக்கிருக்கும் நேசமும் பாசமும் சிறிதல்ல. அவர்கள்தங்கள் இஷ்டப்படி ஆட்ட வல்லவர். ஆதலால் அவர்களைச் சீர்திருத்தாததினால் உண்டாகுங்கொடுமை கொஞ்சமல்ல, நமது சன்மார்க்க நெறி ஒருவிடத்தில் பங்கப்பட்டால் முற்றுமழிந்துபோம். துன்மார்க்கமானது ஓரிடத்திருந்தாலும் வைக்கோல்போரிற்பட்ட தீயைப்போல் நாடெங்கும் பரவும். ஆதலால் பெண்களுக்குக் கூடியவளவு அறிவுண்டாகச் செய்வதும் அவர்கள் மனவிருளை யகற்றுவதும் நமது கடமையேயாம்.

மூளையினாலாகத்தக்க வேலையும் அதை நடத்தும் விதமும்.

தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளும் இயங்குவதற்கும், இவ்வியக்கத்தினால் நமக்குண்டாகும் சகல உணர்ச்சி பேதங்களுக்கும்மூளையே பிரதானமானது. அதை ஆன்மாவின் நிலையென்று மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுவர். தேகத்திலுள்ள கரணங்கள், தத்துவங்கள்முதலிய யாவற்றினும் அது மிகவும் சிறந்ததென்பது தேகத்தின் எல்லாப்பாகங்களிலும் மிகவுந் திண்ணிய மண்டை ஓடு அல்லது கபாலத்துக்குள் கடவுள் அதை அமைத்துவைத்திருக்கும் அருமையினாலேயே தெளிவாய் விளங்குகிறது. "நான் நினைக்கிறது நெஞ்சிலிருக்கிறது, வாயில் வரவில்லை" "அவன் வயிற்றைக் கிழித்தால் வாரடைக்கும் அக்ஷரங்கிடையாது" என்னும் சாதாரண பழக்கச்சொற்களை ஆதாரமாகக்கொண்டு, மூளையினுடைய அருமைப்பாட்டையும், சகல எண்ணங்களுக்கும் அதுவே உற்பத்தி ஸ்தானமென்பதையும் புராதன இந்துக்கள் அறிந்திலரென்று சிலநவீனசா

ஸ்திரீகள் கூறுகிறார்கள். லலாடஸ்தானம், பிரம்மரந்திரம், துவாதசாந்தம் என்னும் பதப்பிரயோகங்களையும், "எண்சாணுடம்புக்கும் சிரசே பிரதானம்" என்னும் பழமொழியின் தத்துவார்த்தத்தையும், சகலவியாதிகளுக்கும் தைலவர்க்கங்களைக்கொண்டு சிரசில் பிரயோகிக்க வேண்டியதென்று இந்துக்களின் ஆயுள்வேதம் முறையிடும் உண்மைகளையும் அவர்கள் உணர்ந்திலர்போலும். ஏனைய எல்லா உறுப்புகளையும் இயக்கத்தக்க ஆன்ம நிலையும். உணர்ச்சிஸ்தானமும், எண்ணமுதிக்கும் ஆதிபீடமும் சிரசென்பதை அறிந்தே நம்மனோர் சிரசைப் பிரதானமாகக் கொண்டார்கள்.

விடாது வருந்தி வாசிப்பதினால் மூளையின் சக்தி அதிகரித்துப் புத்தி விசாலப்படுகிறது. அதனால் மூளை எவ்வளவுங் கெட்டுப்போகிறதில்லை; தேக அசௌக்கியத்தினாலும், மனோவியாகூலங்களினாலும், பயம், திகில் முதலிய சங்கடங்களினாலுமே மூளை வெகுசாய்க் கெட்டுப்போகின்றது.

புரூசே என்பவர் சொல்லுகிற சங்கதியாவது.—சேனையில் காப்டெனாயிருந்த தாவர்னீர் என்பவர் தேகாரோக்கிய ஸ்திதியிலிருக்கையில், கெட்ட சமாசாரமடங்கிய ஒருகடிதத்தை வாசிக்கையிலே இடிவிழுந்தாற்போல் அசைவற்று நின்று, பாரிசவாய்வுகண்டு, பேசச் சக்தியற்றவரானார். சிலநாளைக்கு பின்பு சொஸ்தமாகிவருகையில், அவருடையமனைவியினிடத்திலிருந்து ஒருகடிதம்வந்தது; அதை வாசித்தவுடனே உதிரம் தலைக்கேறிப் பேச்சற்று, அசைவற்று, அறிவுகெட்டு மூன்றுதினத்தில் இறந்துபோனார். அவருடைய தலையைப் பரிசோதித்துப் பார்க்கையில், தலையிலுள்ள இரத்தநாடிகளில் உதிரம் அடைத்துக்கொண்டு மூளையில் சிறு கட்டிகள் எழும்பியிருந்தன.

இத்தியாதி அனுபவப்பிரசித்தமான காரியங்களை வாசிக்கும்போது மூளை கெட்டுப்போவதற்குக்காரணம் மனோவியாகூலத்தை விளைக்கத்தக்க தோற்றங்களென்றே தெரியவருகிறது. வருந்தி வாசிப்பதினாலேயே மூளை கெட்டுப்போகிறதென்பது சாஸ்திர அயுக்தம். தேகத்தை ஆரோக்கிய ஸ்திதியில் வைத்துக்கொண்டும், போஜனம் உட்கொண்டவுடனே ஒரு மணிநேரம் வரையில் மூளைக்கு அதிகவேலை தராமலும் மாத்திரம் இருப்போமாகில் எவ்வளவு பிரயாசைப்பட்டு நாம் வாசித்தல் முதலிய மனோவேலைகளைச் செய்துகொண்டு வந்தாலும் மூளை கெட்டுபோவதற்கிடமிராது. காலக்கிரமம் தப்பிப் போஜனம் உட்கொள்ளுவதினாலும், அமிதமாய்ச்சாப்பிடுவதினாலும் சாப்பிட்டவுடனே ஆசோதையின்றி மனோவேலையில் பிரவர்த்திப்பதினாலும், வியாகூலங்கள் முதலிய சஞ்சலங்கள் மனதைக் கவரவொட்டுவதினாலுமே தான மூளை கெட்டுப்போய் அகாலமரணம் நேரிடுகிறது.

(விவேகசுந்தரம்)

இரைப்பையில் உண்டாகும் விசித்திர சேஷ்டைகள்.

ஆகாரம் உட்சென்றவுடனே ஜீர்ண நீர் சுரக்கிறதுந்தவிர இரைப்பையில் இன்னுஞ்சில விந்தைகள் நடக்கின்றன. நாம்பட்டினியாயிருக்கும்போது இரைப்பையின் பக்கங்கள் வெறும் பையைப்போலத்தளர்த்தியாயிருக்கின்றன. சாப்பிட ஆரம்பித்தவுடன் அந்த இரைப்பையின் பக்கங்கள் விலகி, ஆகாரம் வந்துவிழ இடங்கொடுக்கின்றன. அப்போது இரைப்பையில் ஓர்வித அசைவுண்டாகி தயிர்கடையும் வண்ணமாய் ஆகாரம் முன்னும் பின்னும் சுழல்கின்றது. இந்த அசைவு ஆரம்பத்தில் மெதுவாயிருந்து ஜீர்ணம் ஆக ஆக வேகமாகின்றது. இரண்டுவஸ்துக்களை ஒருபாத்திரத்தில் போட்டுக் குலுக்கிக் கலக்குவதுபோல, அந்தஅசைவினால் ஆகாரம் ஜீர்ணநீரோடு நாலண்டையுங் கலந்து ஒத்துக்கொள்ளுகிறது.

நாம் சாப்பிடும் ஆகாரம் அன்னப்பாகாக மாறினபிறகு இரைப்பையினின்றும் குடலில்போய்விழுந்து இன்னுஞ்சில வேறுபாடுகளை அடைகின்றது. மேற்சொன்ன அசைவு போசனத்தை ஜீர்ணநீரோடு கலப்பதுமன்றி, அது பாகானபிறகு இரைப்பையின் எந்தப்பக்கத்தில் குடலுக்கு வழியிருக்கின்றதோ அங்கே கொண்டுபோய்த் தள்ளுகிறது.

ஜீர்ணமாவதற்குமுன் ஆகாரம் குடலுக்குள்ளே செல்லுவதாயிருந்தால் வெகு சங்கடமுண்டாகும். இது உண்டாகாமலிருக்கும் பொருட்டு குடலின் துவாரத்தண்டை மூடி அல்லது வாசற்காப்பான் ஒன்றுண்டு. அதன் காரியம் என்னவென்றால், ஜீர்ணமான பதார்த்தங்களைக் குடலுக்குப்போகவிட்டு, அப்படி ஆகாதவைகளை மறுபடி இரைப்பைக்கே திருப்பிவிடுகின்றது. இந்த விசித்திரமான சக்தியைச் சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுள் அதற்கு அமைத்திருக்கிறார்.

சுகாதார முறைமைகள்.

நல்ல நித்திரைக் கடுத்தவைகள்:—ஒரு சுத்தமான நல்லபடுக்கையும், களைப்பு உண்டாக்கக்கூடிய போதுமான தேகபயிற்சியும், இன்பந்தரும் வேலையும், நல்ல ஆகாரமும். அதிககாங்கையாயிராத அறையும், சுத்த மனச்சாட்சியும், மயக்கம் முதலியவைகளை உண்டாக்கத்தக்க வஸ்துக்களை உபயோகிக்கா திருத்தலுந் தான். அதிகவேலைசெய்கிறவர்களும், கண் குழிந்தவர்களும், இராத்திரியில் தூக்கமில்லாதவர்களும் மேற்கூறியகாரியங்களைக் கவனிப்பார்களாகில், நன்

றாய் நித்திரைசெய்யலாம்; இல்லாவிட்டால் அவர்களின் ஆயுசு மிகவும் குறைந்ததாகவே இருக்கும்.

ஒருவன் தனது அறையில் சுகமாய் வசிக்க விரும்பினால், அவன் அந்த அறையின்மூலமாய் 1200-கன அடிக்குக் குறையாததும் 2000-கன அடிக்கு மேற்படாததுமான ஆகாயம் ஊடுருவிச் செல்லுகிறதா! என்று கவனிக்கவேண்டியது. இன்னொருவன்கூட அந்த அறையில் இருப்பானாகில், ஆகாயம் கெட்டுப்போவதுமன்றி ஒன்றுக்கும் உதவாததுமாகி விடுகிறது. அது அசௌக்கியமும் அசுசியுமுள்ள ஆகாயமாய் மாறிப்போகிறது. ஒருவன் இன்னொருவன்தனது மூச்சால் வெளியே எறிந்து விடும் கெட்ட ஆகாயத்தைத் திரும்ப சுவாசிக்கிறான்; அது அருவருக்கப்படத்தக்க கெடுதியான ஆகாயம் ஒருசிறு அறையில் அநேகர் கூடியிருந்தால், சிலருக்குத் தலைவலியும், சிலருக்கு உடம்புவலியும், எல்லாருக்குமே ஒருவித மூச்சு தடுமாற்றமும் உண்டாவதையும் நாம் அனுபோகத்தில் கண்டிருக்கலாம்.

போஜனக் கவலையைப்பார்க்கிலும் நமது இளைப்பை ஆற்றும் கவலையே அதிகப் பெரிதாயிருக்கிறது. நாம் அப்படிக்கவலைப்படுவது, அதன் விசேஷத்தைப் பற்றியல்ல. அது அகப்படுவது கஷ்டமாயிருப்பதினாலேதான். அதிக இளைப்பாறுதல் சுகமான நித்திரையினால் உண்டாகிறது. எல்லா விஷயங்களிலும் சமானமான இரண்டு ஸ்திரீகளில் சுகமாய் நித்திரை செய்பவள் அதிக நல்லொழுக்கமுள்ளவளும், சுகமுள்ளவளும், பலசாலியுமாயிருப்பாள். சடுதியில் கோபமுண்டாதல், முறுமுறுப்பு, மனசஞ்சலம் முதலியனவற்றை நித்திரை நீக்கிவிடும், அதிக யோசனையால் தடுமாறும் புத்திக்குப் புது ஊக்கத்தை அதுதிரும்ப உண்டாக்கும்; களைத்ததேகத்துக்குப் பலம் கொடுக்கும்; தலைவலியைச் சொஸ்தமாக்கும்; மெய்யாகவே, நித்திரையானது நீக்கிவிடும் வியாதிகள் வெகு ஏராளமாக இருக்கின்றன.

வைத்திய வினோதம்.

பல்நோய்.

சீதளத்தினால் ஈறு கட்டிக்கொண்டு பற்கள் நோய் எடுத்து பலர் பாதைப்படுகிறதுண்டு. இதற்குக் காட்டாமணக்குத்தான் சிறந்த அவுடதம். காட்டாமணக்குக் கொம்பைச் சாண்சாணாகத் தறித்துக் கொண்டு அடுப்புத்தணலில் ஒரு நுனியைச் சொருகிச் சுட்டு ஒவ்வொன்றாய் எடுத்து நோயுள்ள பற்களின்மீது படும்படி மற்றொரு நுனியைப் பிடித்துக்கொண்டு வைத்துச் சூடும்பாறுக்கக் கடித்தால் நோய்க்கு இதமாயிருப்பதுந் தவிர சீதளத்தைப் பரிகரித்துப் பல்நோயைப் போக்கிவிடும்.

சிரங்கு

1. நீரடிவித்து பாலில் அரைத்துச் சிரங்குகளுக்குப்போடவும் விடாமல் இரண்டுமூன்றுநாள்போட்டால் சிரங்கு போய்விடும்.

2. ஆமணக்கெண்ணெயும் முட்டைச்சாம்பலும் மயில்துத்தத்தூளும் கூட்டிக்குழைத்துப் போடுவதும் இந்நாட்டில் சிறந்த மருந்து

பாகசாஸ்திர வினோதம்.

தேங்காய் துவயல்.

நல்ல தேங்காயை உடைத்து ஓட்டைப் போக்கிவிட்டு அதனை நெகிழ அரைத்து உ-பலம் உளுத்தம்பருப்பும், ஒருரூபா யெடை மிளகாயும் நெய்யில்வறுத்து இவ்விரண்டையும் தேங்காயுடன் போதுமான உப்புஞ்சேர்த்து மறுபடியும் ஒன்றாக அரைத்து ஒரு நல்லபாத்திரத்திற் பத்திரப்படுத்திப் புதிய போசனத்திற் குபயோகப்படுத்திக் கொள்ளவேண்டியது.

எலுமிச்சங்காய் ஊறுகாய்.

ஒரு பெரிய பாத்திரத்தில் எழுபடிச் சுத்தநீர்விட்டு அடுப்பின்மீது கொதிக்கவைத்துக் கொதித்துவருஞ் சமயத்தில் இறக்கிக்கொண்டு, நூறு பெரிய எலுமிச்சம்பழத்தை அதிற்போட்டு ஒருநிமிஷம் தாமதித்துக் கொதிநீரினின்றும் எடுத்து, வெள்ளைக்குட்டையால் ஒவ்வொன்றையும் துடைத்து வைத்துக் கொண்டு கல்மண்போக்கிச் சுத்திசெய்து, வெய்யிலில்காயவைத்த ஒன்றரைபடி உப்பையும், நல்லெண்ணெயில் தனித்தனியே வறுத்த மூன்றரை அல்லது ச-பலம் மிளகாயையும், க-பலம் சீரகத்தையும், பொடிசெய்து அப்பொடிகளையும், ரு-பலம் இஞ்சிரசத்தையும், பதினைந்துபலம் சிறுக அரிந்த பச்சைமிளகாயையும் பத்துப்பலம் நல்லெண்ணெயில்சேர்த்துப்பிசைந்து, ஷை காய்களை விட்டுப்போகாமல் நான்காகப்பிளந்து ஒவ்வொன்றிலும் அச்சம்பாரத்தை நிரப்பி வைக்கவேண்டும். பின்பு ஒரு பெரிய ஏனத்தில் பத்துப்பலம் நல்லெண்ணெய்வார்த்து, அதில் உ-பலம் உரித்த வெள்ளைப்பூண்டும், வகையொன்றுக்கு அரை பலம் ஆக சீரக வெந்தயங்களும், ஒரு பிடிக் கறிவேப்பிலையும், போட்டுவறுத்து வரும்போது, மேலே பக்குவப்படுத்திவைத்திருக்குங் காய்களை ஒன்றுசேரக் கொட்டித் தாளித்துப் புகையடங்கியபின் வேறொரு சாடியில் எடுத்துவைத்து வாயை சீலையால் மூடி இருபதுநாள் வெயிலில்வைத்துப் பிறகு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

விளக்குத்திரி.

ஒரு திரியை நல்ல காடியில் நனைத்து, நன்றாகக் காயவைத்துப் பிறகு விளக்கில் உபயோகித்தால், புகை உண்டாகா. திரி வெகு பிரகாசமாயும் நேர்த்தியாயும் எரியும்.

விடுகவி.

பஞ்சவருமோராளவே யொக்கச்சேர்ந்தால்
 பகுத்திடவே பத்துப்பேராகுங்காணீர்
மிஞ்சிவடாதெப்பொருளும் வகிப்போன்யாவன்
 வினவுதலுக்கவனிவனென் றிருப்போன்யாவன்
மஞ்சுலவவெழுந்துநிற்கு மன்னன்யாவன்
 மாதைப்புணர்ந்தழகொழுக வைப்போன்யாவன்
அஞ்சலிக்கவாலயத்துட் சென்றான்முன்னே
 உவசியம்வந்திடுமெனவ னறிவிப்பீரோ.

விடைக்கெதிர்பார்ப்போன்.